செ.வெ.எண்.33 நாள்.26.06.2020

# பத்திரிகை செய்தி

**வருவாய் தீர்வாயம் - ஜமாபந்தி 2020 ஆண்டிற்கான மனுக்களை இணைய தளம் மூலமாக மட்டுமே பதிவு செய்தல் குறித்த அறிவிப்பு.**

-----

கடலூர் மாவட்டத்தில் அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்களிலும், நடப்பு பசலி ஆண்டு 1429 (2019-2020) ஆண்டிற்கான வருவாய் தீர்வாயம் பின்வரும் அலுவலர்களால் நடத்தப்படுகிறது.

| வ. எண். | வருவாய்த் தீர்வாய அலுவலர் | வட்டம் |
|---|---|---|
| 1. | மாவட்ட ஆட்சியர். | புவனகிரி. |
| 2. | மாவட்ட வருவாய் அலுவலர். | கடலூர். |
| 3. | சார் ஆட்சியர், சிதம்பரம். | சிதம்பரம். |
| 4. | சார் ஆட்சியர், விருத்தாசலம். | திட்டக்குடி. |
| 5. | வருவாய் கோட்டாட்சியர், கடலூர். | பண்ருட்டி. |
| 6. | தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி), கடலூர் | குறிஞ்சிப்பாடி. |
| 7. | மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்), கடலூர். | வேப்பூர். |
| 8. | மாவட்ட மேலாளர், தாட்கோ, கடலூர். | காட்டுமன்னார்கோயில். |
| 9. | மாவட்ட வழங்கல் அலுவலர், கடலூர் | விருத்தாசலம். |
| 10. | தனித் துணை ஆட்சியர் (முத்திரைத்தாள்), கடலூர். | ஸ்ரீமுஷ்ணம். |

இந்த ஆண்டில் (2020) நடத்தப் பெறும் வருவாய் தீர்வாயத்தில், பொது மக்களின் பாதுகாப்பு கருதி, மனுக்கள் பெறும் நடைமுறை மாற்றியமைக்கப்பட்டுள்ளது என்றும், பொது மக்கள் மனு அளிக்கும் பொருட்டு சம்பந்தப்பட்ட வட்டாட்சியர் அலுவலகத்திற்கு நேரில் வரத் தேவையில்லை என்றும் அரசால் ஆணையிடப்பட்டுள்ளது. மாற்றாக, புதிய நடைமுறையின்படி, 29.06.2020 முதல் 15.07.2020 வரை மனுதாரர்கள் பசலி 1429 (2019-20) வருவாய் தீர்வாய மனுக்களை https://gdp.tn.gov.in/jamabandhi என்கிற வலைதளத்தில் இணைய வழியில் மட்டுமே தாமாக அல்லது இ-சேவை மையம் வாயிலாக பதிவேற்றம் செய்யலாம் என்றும், 15.07.2020 வரை பதிவு செய்யப்படும் அனைத்து கோரிக்கை மனுக்களும் பரிசீலனை செய்யப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சியர்,
கடலூர்.